# பத்து அவதார தோத்திரம்.

(ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்த தஸாவதார ஸ்தோத்ரம்)

தமிழாக்கம் : பொய்கையடியான்.



திருவரங்கத்தலத்தில் பத்து வெவ்வேறு கோலத்தில் ,

சுற்றுமிருந்து ரசிகர்கள் கண்குளிரக் கண்டுமகிழ்ந்திட ;

ஒருஅரங்கில் பாத்திரத்திற்கேற்ப வேடமிட்டுத் தொடரப் ,

பெற்று விளங்கும் நடன் நம்மை என்றும் காக்கட்டும் . 1.

மதுகைடபர்களால் பிரளயகாலத்தில் ஒளிக்கப்பட்ட ,

வேதங்களைத் தேடிக்கடலுக்கடியில் நீந்தும் போது ;

மெதுவாக அலைகள் தொட்டிலிலாட்டும் சுகமளிக்க ,

நாதன் ! மீனமாக அவதரித்தவன் நம்மைகாக்கட்டும் . 2.

மந்திரமலையை கூர்மமாக தன் முதுகினில்தாங்கி,
அதன்சுழற்சியால் வருடப்பட்டு யோகத்தில்புகுந்திட ;
சுதந்திரமூச்சுக்காற்றால் அலையெழ, பிராட்டியுடன் ,
அவன் சயனித்திருக்கும் நிலை உலகைகாக்கட்டும் . 3.
பெரியவராக வடிவும் கடலோசையைவிட உருமலுடன் ,
இருஅழகிய பற்களினால் மூழ்கும் பூமியைத்தூக்கி ;
சிறிய கோரைக்கிழங்குபோல அவற்றினுக்கிடையே ,
இருத்தி, உய்யச்செய்த வராகர் உலகைக்காக்கட்டும் . 4.
அற்புத கேஸரியாக வைகுந்த நாதன் ஓர்தூணிருந்து ,
நகங்களே ஆயுதமாகிட தன்பஞ்சாயுதங்களைவிடுத்து ;
அற்பன் இரணியன் முன்தோன்றிய அந்தநிகழ்ச்சியை ,
சகம்புகழச் செய்தவன் அனைத்துலகையும் காக்கட்டும் 5.
திருமால் வாமனனாகி மகாபலியின் கர்வத்தையடக்க ,
வளர்ந்து எல்லாவுலகையும் அளந்து மேலேச் செல்ல ;
திருவடிநீரே கங்கையாகி சிவன் முடியை பரிசுத்தமாக்கி ,
கிளர்ந்து எங்கும் ஓடச்செய்தவன் நம்மைக் காக்கட்டும் . 6.
பரசுராமனாகித் தந்தையை, ஓர் க்ஷத்திரியன் கொல்ல ,
இருபத்தோறு தலைமுறைகள் இவ்வுலகில் அவர்களது ;
அரசு இல்லாமலழித்து, வேள்வியை நடத்திபின் பூமியை ,
ஒருவருக்கு ஈந்துவிட்டு மேற்கில் தங்கியவர் காக்கட்டும் . 7.



நீர்வற்றிடச் செய்து, தீயூட்டவல்ல பாணப்பிரயோகத்தில் ,

சமர்த்தனும், எந்நிலையிலும் உமதடிகளை அடைவேனென ;

யார்ஒருவர் உரைத்தாலும் உயிரைக்கொடுத்து காப்பவனாக ,

சமர்புரிவதில் வீரனுமான ராமன் நம்மைக் காக்கவேண்டும் . 8.

அத்தினாபுரத்தை சாய்த்து, பிரலம்பனையும் மாய்த்து செய்த ,

பல வீர, தீர விளையாட்டுக்கள் மிகவும் பிரசித்தமானவை ;

அத்தனை செயல்களும் கண்ணன் லீலையுடன் சேர்ந்தினிக்க ,

பலராமனாக அவதரித்தவன் நமக்கு க்ஷேமத்தையளிகட்டும் . 9.

பாலகோபாலனாக எம்பெருமான் பல லீலைகளால் உலகம் ,

உய்யும்படிச் செய்து, யமுனையில் குதித்து லீலைகள்புரிந்து ;

ஓலமிட! காளியனின் அநேக மணிமுடிகளில் நடனமாடிய ,

மெய்யன்பன் கண்ணனுக்கு அநேக நமஸ்காரங்கள் உரியன . 10.

கலியுகத்தின் முடிவில் விஷ்ணுயஸஸ் என்பவரின்மகனாக ,

பெருகிய தீயவர்களை கல்கியென்ற திருநாமத்துடன் வதைத்து ;

கலியின் கொடுமையைக் களைந்து, களையெடுத்த மண்ணில் ,

பெருகிய நீரில் கிருதயுகப் பயிர் செய்யயிருப்பவன் காக்கட்டும் ! 11.

************************************************************